Registered as News Paper — பக்கங்கள் 04 — விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 04 (20 - 11 - 1991) புதன்கிழமை ஓசை: 275

## இலங்கையில் போலி டாக்டர்கள் எண்ணிக்கை எண்பதாயிரம்

இலங்கையில் எண்பதாயிரம் போலி டாக்டர்கள் மேற்கத்தைய மருத்துவ சிகிச்சையில் ஈடுபட்டுவருவதாக சுயாதீன மருத்துவர் சங்கத் தலைவர் பேர்னாட் டி. சொய்சா தெரிவித்துள்ளார். இவர்களில் அனேகமானோர் மருத்துவ சிற்றூழியர்களாகவோ, தாதிகளாகவோ, அல்லது தோட்டவைத்தியசாலை மருந்தாளர்களாகவோ கடமை புரிந்தவர்களாவர் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்தில் இத்தகவலை (4ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபா அணிவகுப்பை ஏற்றார்

# தமிழீழ காவல்துறை உதயம்

இலவச இணைப்பு

1982 தொடக்கம் மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

## காவல் நிலையங்கள் விரைவில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ காவல்துறை யாழ்ப்பாணத்தில் வைபவரீதியாக நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ் வைபவத்தில் தமிழீழத் தேசிய தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் காவல் துறையினரின் விசேட அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா, செயலாளர் திரு. யோகரட்ணம், மற்றும் யாழ். மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் இளங்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தமிழருக்கென ஒரு காவல்துறை தமிழீழ தேசியத் தலைவர் திரு. பிரபாகரனால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இது தொடர்பாக நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழீழ காவல்துறையின் பொறுப்பாளர் திரு. நடேசன் தெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் தெரிவிக்கும்போது தமிழீழத்தில் சட்ட ஒழுங்கு மாத்திரமல்ல தமிழீழ மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும், தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் காவல்துறை அமைப்பு இயன்றவரை ஒத்துழைப்பு வழங்கும் என்று குறிப்பிட்டார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வருட இறுதிக்குள் சார்க் மாநாடு நேபாளம் இணக்கம்

(காத்மண்டு)

இந்த வருட இறுதிக்குள் ... அறிந்து கொள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 1100 குடும்பங்களுக்கு மீட்புநிதி மாவீரர் வாரத்தில் மீளளிப்பு

மாவீரர் வாரத்தில் ஆயிரத்துநூறு தமிழீழ மீட்புநிதி கடன்பத்திரதாரருக்கான நிதி மீளளிப்பு செய்யப்படவுள்ளது. இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி விடுத்த அறிக்கையின் முழு விபரமும் பின்வருமாறு;

தமிழீழ மண்ணை மீட்பதற்கான வரலாற்றுக் கடமையில் பங்கேற்பது தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்மகன், தமிழ்மகள் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். இந்த வரலாற்றுக் கடமையை நிறைவேற்றப் போராளிகளும், பொருளும் வேண்டும். அறிவாற்றலும் முயற்சியும் வேண்டும் உலகில் எந்தவொரு முதன்மை மக்களாயத்திற்கும் சற்றும்சளைக்காதவகையில் வீரமும், பொருளும், அறிவாற்றலும், முயற்சியும் தமிழீழ மக்களிடமுண்டு. தமிழீழ மண்ணின் விடுதலைக்காக, தமிழினத்தின் அடிமை விலங்கை அறுப்பதற்காக இவையனைத்தும் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## "எங்கள் உடன் பிறப்புக்களை நாங்கள் மறக்கவில்லை"

"எங்களுக்காக மடிந்த எங்கள் உடன் பிறப்புக்களே உங்களை நாங்கள் மறக்கவில்லை. உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சில் நிழலாடும்" என மனமிரொண்டு மாவீரர்நாளில் நினைவொலி எழுப்பி மாவீரர் சுடர் ஏற்றுவோம் என இவ் வருட மாவீரர்நாள் குறித்து

கோசரட்ணம், மற்றும் யாழ் மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன், விடுதலைப்

காவல்துறை தமிழீழ தேசியத் தலைவர் திரு. பிரபாகரனால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இது தொடர்பாக நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழீழ காவல்துறையின் பொறுப்பாளர் திரு. நடேசன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கும்போது தமிழீழத்தில் சட்ட ஒழுங்கு மாத்திரமல்ல தமிழீழ மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும், தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் காவல்துறை அமைப்பு இயன்றளவு ஒத்துழைப்பு வழங்கும் என்று குறிப்பிட்டார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)



கடமையை நிறைவேற்றப் ... யும் தமிழீழ மக்களிடமுண்டு.

(2 ஆம் பக்கம் பார்க்க)

# வருட இறுதிக்குள் சார்க் மாநாடு நேபாளம் இணக்கம்

(காத்மண்டு)

இந்த வருட இறுதிக்குள் 'சார்க்' நாடுகளின் உச்சி மாநாட்டை நடாத்துவதற்கு நேபாள பிரதமர் டி. பி. கொய்ராலா தனது சம்மதத்தை தெரிவித்துள்ளார். மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் ஜலீலிடம் இத்தகவலை அவர் வெளியிட்டார். உச்சி மாநாட்டை நடாத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மாலைதீவ ஜனாதிபதி கையூமின் தூதுவராக ஜலீல் காத்மண்டுக்கு சென்றிருந்தார். அவர் டில்லிக்கும் திம்புவிற்கும் விஜயம் செய்து அவர்களின் நிலைப்பாட்டினையும் அறிந்து கொள்வார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# "எங்கள் உடன் பிறப்புக்களை நாங்கள் மறக்கவில்லை"

"எங்களுக்காக மடிந்த உடன் பிறப்புக்களே உங்களை நாங்கள் மறக்கவில்லை. உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சில் நிழலாடும்" என மனங்கொண்டு மாவீரர் நாளில் நினைவொலி எழுப்பி மாவீரர் சுடர் ஏற்றுவோம் என இவ்வருட மாவீரர் நாள் குறித்து புலிகள் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் நாளில் நினைவொலி எழுப்பி மாவீரர் சுடர் ஏற்றுவோம் என்னும் தலைப்பிலான இத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் வருமாறு:

எம்மக்களின் விடிவிற்கான வெளிச்சங்களாகவும், எமது சுதந்திர தாகக விருட்சத்தின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சினை பற்றி தொண்டா இந்திய பிரதமருடன் பேசுவார்

(கொழும்பு)

இந்தியா சென்றுள்ள அமைச்சர் தொண்டமான் இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாகவும் பேசுவார் எனத் தெரிய வருகிறது.

உல்லாசப் பயணம் சம்பந்தமான மாநாடு ஒன்றில் சிறிலங்காவின் சார்பில் கலந்து கொள்ள அமைச்சர் தொண்டமான் புதுடில்லி சென்றுள்ளார். இப்பயணத்தின் போது இந்தியப் பிரதமரைச் சந்திக்கும் பேசவுள்ள அமைச்சர் தொண்டமான், சார்க் மாநாடு சம்பந்தமாக சிறிலங்கா - இந்திய உறவில் ஏற்பட்ட கசப்புணர்வை நீக்க முற்படும் வேளை இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாகவும் பேசுவார் எனத் தெரியவருகிறது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாகத்தான் வைத்த தீர்வுத் திட்டம் தொடர்பாகவும், அதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பைக் கோருவார் எனவும் தெரியவருகின்றது.

# திட்டமிட்டபடி பரீட்சை காகிதாதிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டிற்கான பழைய பாடத்திட்டம், இதே ஆண்டு புதிய பாடத்திட்டம் 1991 புதிய பாடத்திட்டம், ஆகியவற்றுக்குமாக க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை ஏக காலத்தில் நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள இப் பரீட்சைக்கான ஆயத்தவேலைகள் விரைவாக நடைபெறுவதாகவும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தின் ஆயுத பலம் சீன தாங்கிகளால் அதிகரித்துள்ளது

(கொழும்பு)

சீனாவிடமிருந்தும் செக்கோசிலாவாக்கியாவிடமிருந்தும் அண்மையில் பெறப்பட்ட நவீன தாங்கிகள் இராணுவத்தின் ஆயுதசக்தியை அதிகரித்துள்ளது. ஆனையிறவு யுத்தத்தின்போது இந்த நவீன தாங்கிகளும் வாகனங்களும் கிடைத்திருந்தால் முற்றுகையை 48 மணி நேரத்தில் முறியடித்திருப்போம் இவ்வாறு கூட்டுப்படைத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் கூட்டுப்படைத் தலைமையகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது; மன்னார் பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. முருங்கன், மடு பகுதிகளில் அகதிகள் உள்ளமையால் அங்கு இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள்

ஹமில்டன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை முடக்க இந்திய உதவியை இராணுவ தளபதி நாடுகிறார்

தென் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதை நிறுத்துவதற்கான வழிவகைகள் குறித்து இந்திய பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த சிறிலங்கா இராணுவ முதுநிலை அதிகாரி ஒருவரைத் தான் இந்தியா அனுப்பவுள்ளதாகப் புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா தெரிவித்தார்.

இந்திய - இலங்கை கடற்பகுதியில் விடுதலைப் புலிகள் ஆயுதம் கடத்துவதை முடக்குவது வடக்கு - கிழக்குப் பகுதியில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படைகளுக்கு உதவியாக அமையும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாநாட்டிற்கு உணவு சிறிலங்கா மௌனம்

யாழ். அரசாங்க உணவுக் களஞ்சிய சாலைகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் முற்றாகத் தீர்ந்து போகும் அபாயம் எழுந்துள்ள இந்த வேளையில் சிறிலங்கா அரசு உணவுப் பொருள் அனுப்பி வைக்கும் விடயத்தில் நீண்ட மௌனம் சாதித்துவருகிறது என்று யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உணவை உடன் அனுப்ப ச. செ. சிலுவை கோரிக்கை

யாழ்மாவட்ட மக்கள் பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ளதால் தேவையான அளவு உணவுப் பொருள்களை உடனடியாக அனுப்பி வைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வாழ்பவர்களாக இருக்கின்றார்களா? இன்று பொதுவாக நாம் சந்திக்கும் சாவுகள் எமது மக்களாயத்தின் விடுதலைக்கு உதவுகின்றனவா? இந்தச் சாவுகளை வரலாற்று வடிவங்களாக மாற்ற வேண்டும். இன்றைய தமிழரின் சாவின் நாளை தமிழின எழிற்தோன்றல்கள் வாழ்வினைப் பெறவேண்டும்.

இவ விடுதலைப்போரில் நிறைவாக எதனையாவது செய்திருக்கிறார்களா என்று சிந்திக்கும் மார்க்க வேண்டும்.

உலகில் உன்னதமான தலைவர்கள் பலர் தோன்றி அடிமைப்பட்டுப்போன தம் மக்களின் விடுதலையைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இன்றும் வழிநடத்திக்கொண்

யார்கள் என்பதில் எமக்கு முழுமையான நம்பிக்கையுண்டு ஆயினும் இன்னமும் விலகி நிற்பவர்கள் வாய்ப்பையப் பயன்படுத்திக்கொண்டு வரலாற்றுப் பெரும்புகழைத் தேடிக் கொள்ள முன்வரவேண்டும்.

தமிழீழ மண்ணை நேசிக்கின்ற தமிழர்களில் தமிழீழ மீட்பு நிதிக்கு இதுவரை தாமாகவே மனமுவந்து பங்களிப்புச் செய்த கன்னியராக்களுக்கான மனத் தமிழ்குடும்பத்தாருக்குத் தலைசாய்த்து எமது நன்றியினைத் தெரிவிப்பதோடு அவர்களின் ஆயிரத்து நூறு குடும்பத்தாருக்கான கடனை, தமிழீழ மண்ணுக்காவும், மக்களுக்காகவும் தம் முயிரைத் தற்கொடையாகத் தந்த தூயவர்களின் நினைவு வளமான மாவீரர்வாரத்தில் அளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

களை ஏற்றவேண்டும் அந்த வேளையில் பார்க்கும் இடம் எங்கும் ஒளிவெள்ளம் பாய்ச்சப்பட்டதுபோன்று மாவீரர்களின் நினைவாக சுடரேற்றி "உங்கள் நெஞ்சில் கனன்ற விடுதலைத்தீயை அணையாது நாங்கள் ஏற்றிவைத்தன் வோம்" என்பது போல இந்தச் சுடரேற்றும் வைபவம் நிகழ வேண்டும்.

தமிழீழ மக்கள் அனைவரும் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று மாவீரருக்கு அஞ்சலி செலுத்துவோம்.

---

## 65ஆம் நாள் வீர அஞ்சலி

தாயை மகிழ்விக்க
09 — 01 — 1976



தாயக கத்தை மகிழ்விக்க
17 — 09 — 1991

### வீரவேங்கை மில்ரன்
### (தெட்சணாமூர்த்தி சங்கரதாஸ்)

வாழ்வின் அர்த்தத்தை
இரத்தத்தால் எழுதிச் சென்றவனே
புகழுடலைப் புதைத்த உன்
புதைகுழியின் மேலே
வீறுகொண்டு மலரும் புரட்சிப் பூக்களை
மாலையாக்கிப் புனைந்து - தமிழ்
அன்னைக்கே காணிக்கையாக்கி - உன்
ஆத்ம சாந்திக்காய் நிதமும்
அமைதியாய்ப் பிரார்த்திக்கின்றோம்.

ஏழாலை தெற்கு நாகபூஷணி அம்மன் தாயே என் பிள்ளை உன் அடைக்கலம் அடைக்கலம் என்றேன். அடைக்கலம் என்றது அடிக்கமலம் என்று கேட்டதோ. உந்தன் திருவடிக் கமலத்தில் என் பிள்ளையையும் சேர்த்துப் பாடியதற்கு பரிசு தந்தாயோ.

உரும்பராய் — பெற்றோர், சகோதர, சகோதரிகள்
(B/3508) — உற்றார், உறவினர், நண்பர்கள்

---

## வரி விளம்பரம்

### விவாகப் பொருத்துனர் சேவை நிலையம்

உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்பதவி உத்தியோகம் வகிக்கும் றோமன் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து கிறிஸ்தவராதும் இந்து வரன்மாரதும் விபரம் கொடுத்து (ஏடு) நிரம்ப ஜாதியாக எம்மிடமுண்டு. தொடர்பு: எஸ். எ தர்மலிங்கம் 24, புறாடி லேன், கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(R/1940)

### ஜீவிதா
### தொழில் நுட்பக் கூடம்

ரீ. வி. டெக், றேடியோ, மணிக்கூடு, தினைண்டிமி மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும் வீடியோ ஸ்டிக் கடப்பிடிப்பாளர்களும், புதிய மெழுகுவாடல்களும் (புரட்சிப் பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஓட்டுமடச் சந்தி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(B/3489)

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
### சித்தமருத்துவத்துறை இடைக்காலப் பரீட்சை, டிசம்பர் 1991

1991 ஆம் ஆண்டு செப்ரெம்பர் ஒக்ரோபர் மாதத்தில் நடைபெற்ற 1ம், 2ம், 3ம், 4ம், 5ம் வருடாந்தப் பரீட்சையில் சித்திபெய்கத்தவறிய மாணவர்களுக்கு 1991 ம் ஆண்டு டிசெம்பர் 2ம் திகதி இடைக்காலப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்கள் நவம்பர் 20ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்

(B/3501)

---



## நேசன்

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் சாவகச்சேரியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு பருத்தித்துறையில் சிறிலங்காப் படையினருடனான மோதலின்போது காயமுற்ற மருத்துவமனையில் வீரச்சாவெய்திய

**சிவா** (முருகுப்பிள்ளை சிறிதரன் - ஆலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை)

1987 ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பெண் குழந்தை, தந்தை

அச்செழுவில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1988 ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்கள் மூவர் மற்றும் இரண்டு தமிழ்ப் பொதுமக்கள்

1990 ஆம் ஆண்டு மாவிட்டபுரம், தச்சன்காட்டுப் பகுதியில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**சோபன்** (கதிரன் சதீஸ்குமார் - சரசாலை வடக்கு, சாவகச்சேரி)

சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த

**நேசன்** (குலசேகரம் முரளிதரன், நீர்வேலி)

உரும்பராயில் சிறிலங்காப் படையினரின் விமானத் தாக்குதலினால் கொல்லப்பட்ட வயோதிபத்தம்பதியர்

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/3497)

## சிந்தனைக்கு

அசைக்க முடியாத உறுதியும், திடசித்தமும் கொண்டவன், உலகத்தைத் தன் வழியில் தானே உருவாக்கிக் கொள்வான்

- ஜோஹன் கேத்தே

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 20-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# புதியதுமல்ல சாத்தியமானதுமல்ல

விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்குவதே இராணுவத்தின் நோக்கம்; புலிகளை அழிப்பதல்ல. புலிகளின் ஆயுதங்களைக் களையும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும். இவ்வாறு கூட்டுப்படை தலைமைப் பொறுப்பதிகாரியாகப் பதவி ஏற்ற ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளை நிராயுதபாணிகளாக்கும் நடவடிக்கை இன்று நேற்று ஆரம்பமான புதியதொன்றல்ல. இது ஒரு கைத்துப்பாக்கியுடன் விடுதலைப் புலிகள் செயற்படத் தொடங்கிய காலத்தில் இருந்து இன்றுவரை தொடரும் நடவடிக்கையாகவுள்ளது. இம் முயற்சியை சிறிலங்கா பொலிஸ் ஆரம்பித்து வைத்தது. பின்னர் சிறிலங்கா இராணுவத்தில் இருந்து இந்திய இராணுவம் வரை இந்த ஆயுதக்களைவு விவகாரம் சென்றது. ஆனால், புலிகளின் ஆயுதப் பலம் பெருகியதே ஒழிய அழிக்கப் படவில்லை. இந் நீண்டபடிப்பினை ஒன்று மட்டுமே ஆயுதக் களைவு என்ற ஒன்று நடைமுறைச் சாத்தியமற்ற விவகாரம் என்பதை உணர்த்தப் போதுமானதாகும். ஆனால் சிறிலங்கா இராணுவத் தரப்பு அதை இன்னும் உணராமல் உள்ளது.

புலிகளிடம் இருந்து ஆயுதத்தைப் பிரித்தல் என்பது அவர்களின் மரணத்தின்பின் ஏற்படும் ஒரு நிகழ்ச்சியாகும். இதனைச் சிறிலங்கா இராணுவத்தரப்பு இன்னமும் புரிந்து கொள்ளாமல் பேசுவது ஆச்சரியமாகவுள்ளது. புலிகளின் இலட்சியம் விட்டுக்கொடுப்பிற்கு அப்பாற்பட்டது. தமிழ் மக்கள் பாதுகாப்புடனும், சுயகௌரவத்துடனும் வாழவேண்டும் என்பதே புலிகளின் இலட்சியமாகும். புலிகளின் இலட்சியம் நிறைவேறினால் மட்டுமே ஆயுதங்களைப் புலிகள் கைவிடுவர். அல்லது தமது இலட்சியத்திற்காக உயிரைவிடுவர். அவ்வாறானால் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டின் தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும். தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேறாத பட்சத்தில் ஆயுதங்களைக் களைதல் என்பது சாத்தியமானதொன்றல்ல. அதுவும் புலிகள் எவரும் உயிருடன் இருக்கும்வரை இலகுவான காரியமுமல்ல.

இன்று விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர்கள்கூட விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதி பலிக்கின்றார்கள் எனக் கூறவேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் பாராளுமன்றத்தில் பேசிய முஸ்லிம் காங்கிரஸ்கட்சித் தலைவர் அஷ்ரப் துரதிர்ஷ்டவசமாக தமிழ் மக்களின் அபிலாசைகள் புலிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றார். முஸ்லிம் காங்கிரஸ்கட்சித் தலைவர் அஸ்ரப்பிற்கு தமிழரின் உரிமையை பேரம் பேசாத புலிகளுடன் தமிழர் அபிலாசை இணைக்கப்பட்டுள்ளமை துரதிர்ஷ்டவசமாகதெரியலாம். ஆனால், விரும்பியோ அன்றி விரும்பாமலோ தமிழர்களின் அபிலாசைகள் புலிகளுடன் தான் இணைக்கப்பட்டுள்ளது என்பதை அவர் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டிய நிலையில் உள்ளார் என்பதை அவர் உட்பட எவரும் மறுப்பதற்கில்லை.

இதனை சிறிலங்கா அரசாங்கமும், இராணுவமும் புரிந்து கொள்ள வேண்டும். ஒருஇனத்தின் அபிலாசைகளைப் புலிகள் பிரதி பலிக்கின்றனர். அதற்காக அவர்கள் தமது உயிரையும் பணயம் வைக்க தயாராகவுள்ளனர். ஏற்கனவே 3,500 பேருக்குமேல் தமது இன்னுயிரை ஈந்துள்ளார்கள். இந்நிலையில் தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் புலிகளை தமிழ் மக்களிடம் இருந்து பிரிப்பதோ அன்றி புலிகளிடம் இருந்து தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரிப்பதோ சாத்தியப் படக்கூடிய ஒன்றல்ல. அத்தோடு தமது இலட்சியங்களை நிறைவேற்ற புலிகள் ஏந்திய ஆயுதங்களைப் பிரிப்பதோ இலகுவானதல்ல. அதேவேளை, ஒரு இனம் தனது அபிலாசைகளை எந்தவித அடக்குமுறைக்கும் பயந்து கைவிட்டதாக வரலாறும் இல்லை.

# சியோனிசத்தின் எல்லை யூப்பிரட்டீசில் இருந்து நைல் வரை

## பாலஸ்தீனம் பற்றி சில குறிப்புக்கள்

மத்திய கிழக்கில் இஸ்ரேல் எனும் நடு தோன்றுவதற்கு 100 ஆண்டுகளுக்கு முன் அப்பகுதியில் சுமார் 2400 யூதர்களே இருந்தனர். 1947 இல் பாலஸ்தீனியர்களின் மண்ணில் மேற்கு நாடுகளின் அனுசரணையுடன் பலவந்தமாக இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் நிலைமை வேறாகியுள்ளது.

இஸ்ரேலின் தோற்றத்தின் பின்னர் நடைபெற்ற சிறு சிறு யுத்தங்களில் பாலஸ்தீனம் படிப்படியாக தனது மண்ணை இழந்து வந்தது. 1967 இல் முற்றாகவே- தலைநகர் ஜெருசலேம் உட்பட சகல பகுதிகளையும் இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டது. அத்துடன் ஜோர்தானின் ஒருபகுதியையும் சிரியாவின் கோலான் குன்றுப் பகுதி எகிப்தின் சினாய் பாலைவனப் பகுதி என்பனவற்றையும் இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டது. பின்னர் காம்ப்டேவிட் உடன்படிக்கை மூலம் சினாய் பாலைவனப் பகுதியை எகிப்து மீளப் பெற்றுக்கொண்டது.

பாலஸ்தீனியர்களின் சனத்தொகை 56 இலட்சமாகும். இவர்களில் 40 வீதமானோர் பாலஸ்தீனிலும் 60 வீதமானோர் வெளியிலும் வாழ்கின்றனர். ஜோர்தானில் 25 வீதமானோரும் லெபனானில் 10 வீதமானோரும், சிரியாவில் 5 சதவீதமானோரும் மற்றைய நாடுகளில் 5 சதவீதமானோரும் வாழ்கின்றனர். இந்நாடுகளில் பாலஸ்தீனியர்களது பிரச்சினை உணர்ச்சிபூர்வமாக அமைந்துள்ளது.

1964 இல் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இன்று உலகில் 80 க்கு மேற்பட்ட நாடுகளில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

பாலஸ்தீனியர்கள் தமது மண்ணை மீட்டெடுப்பதற்கு இறுதியாக 'இந்தி பாதா' போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள். இந்திபாதா எழுச்சியின் காரணமாக 25 000 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 4,000 பேர் எவ்வித குற்றச்சாட்டுமின்றி நிர்வாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 4 வருடங்களாக இந்தி பாதா போராட்டம் நடைபெறுகிறது. இப் போராட்டத்தில் இஸ்ரேலியர்களின் துப்பாக்கிகளுக்கும் டாங்கிகளுக்கும் எதிராக கற்களைக் கொண்டு போராடி வருகின்றனர். இப்போராட்டங்கள் இஸ்ரேலுக்கு பெரும் நெருக்கடியை கொடுத்துள்ளன.

இருதரப்பினரும் ஜெருசலேம் மத அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகின்றனர். ஜெருசலேம் இஸ்ரவேலியர்களின்புனித பூமிஎன்கின்றனர். இஸ்ரவேலியர் "ஓ இஸ்ரவேலே யூப்பிரட்டீஸ் நதி முதல் நைல் நதி வரை உனது எல்லை" என்ற வாசகம் இஸ்ரவேல் பாராளுமன்றத்தில் பொறிக்கப்பட்டுள்ளது

மத அடிப்படையில் மஸ்ஜிதுல் அக்ஸா என்பது முஸ்லிம்களின் மூன்றாவது புனித தலமாகும். எனவே மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ள ஜெருசலேம் பகுதியை விட்டுக் கொடுக்க பாலஸ்தீனியர்கள் மறுக்கின்றனர்.

# மாவீரர் வாரத்தில் 1100 தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்பு

தமிழீழ மீட்பு நிதி செலுத்திய 1100 பேருக்கு எதிர்வரும் மாவீரர் வாரத்தில் கடன் மீளளிப்பு செய்யப்படவுள்ளது. மாதாந்தவாரியாக தெரிவு செய்யப்பட்டோருக்கு இந்த மீளளிப்பு வழங்கப்படும். தை மாதத்திற்குரிய மீளளிப்பை நல்லூர், கோப்பாய், உடுவில், மானிப்பாய், தெல்லிப்பளை, சங்கானை, பருத்தித்துறை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கீழ்வரும் இலக்கமுடையோருக்கும், வெளியகல்வு செய்த கீழ்வரும் இலக்கமுடையோருக்கும் கிடைக்கும் (ஏனைய மாதத்திற்குரியவை தொடர்ந்து வெளிவரும்]

### நல்லூர்

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01. யா. ந. 802 | 06. யா. ந. 990 | 11 யா. ந. 3321 | 16. யா. ந. 4605 |
| 02. யா. ந. 351 | 07 யா. ந. 1653 | 12. யா. ந. 3415 | 17. யா. ந 4613 |
| 03 யா. ந 388 | 08 யா. ந. 1896 | 13. யா. ந 4046 | 18 யா. ந. 4851 |
| 04. யா. ந. 451 | 09. யா. ந. 2415 | 14. யா. ந. 4235 | |
| 05. யா. ந. 876 | 10. யா. ந. 3268 | 15. யா. ந. 4396 | |

### கோப்பாய்

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01. யா. கோ. 74 | 05 யா. கோ. 587 | 09 யா கோ. 2317 | 13 யா. கோ. 3449 |
| 02. யா. கோ. 362 | 06. யா. கோ. 695 | 10 யா. கோ. 2643 | 14 யா. கோ. 3911 |
| 03. யா. கோ. 523 | 07. யா. கோ. 1586 | 11. யா. கோ. 2867 | 15, யா. கோ. 4566 |
| 04. யா. கோ. 548 | 08 யா. கோ. 1735 | 12. யா. கோ. 2932 | 16. யா. கோ. 6604 |
| | | | 17. யா. கோ. 6203 |

### உடுவில்

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01. யா. உ. 19 | 03. யா. உ. 169 | 05. யா. உ. 516 | 07. யா. உ 641 |
| 02. யா. உ. 124 | 04. யா. உ. 509 | 06. யா. உ. 564 | 08. யா. உ 2445 |
| | | | 09. யா. உ. 2930 |

### மானிப்பாய்

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01. யா. மா. 26 | 04. யா. மா. 159 | 07. யா. மா. 521 | 10. யா. மா. 1086 |
| 02. யா. மா. 42 | 05. யா. மா. 161 | 08. யா மா. 820 | 11. யா. மா. 1808 |
| 03. யா. மா. 98 | 06. யா. மா. 391 | 09. யா. மா. 944 | 12. யா. மா 1924 |
| | | | 13. யா. மா. 3228 |

### தெல்லிப்பளை

தொடர்பு இலக்கம்

| | |
|---|---|
| 01. யா. தெ. 128 | 04. யா. தெ. 332 |
| 02. யா. தெ. 145 | 05. யா. தெ. 969 |
| 03. யா. தெ. 413 | |

### சங்கானை

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01, யா. ச 106 | 05. யா. ச. 836 | 09. யா. ச. 2317 | 13. யா. ச. 3330 |
| 02. யா. ச. 161 | 06. யா. ச. 1259 | 10. யா. ச. 2319 | 14. யா. ச. 3355 |
| 03. யா. ச. 221 | 07. யா. ச. 1278 | 11. யா. ச. 2402 | 15. யா. ச. 3687 |
| 04. யா. ச. 834 | 08. யா. ச. 1746 | 12. யா. ச. 2619 | |

### பருத்தித்துறை

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01. யா. பரு. 52 | 05. யா. பரு. 559 | 09. யா. பரு 999 | 13. யா. பரு. 1536 |
| 02. யா. பரு. 325 | 06. யா. பரு. 814 | 10. யா. பரு. 1[illegible]30 | 14 யா. பரு 1573 |
| 03. யா. பரு. 471 | 07. யா. பரு. 908 | 11. யா. பரு 1321 | |
| 04. யா. பரு. 532 | 08. யா. பரு. 943 | 12. யா. பரு 1359 | |

### வெளியகல்வு

தொடர்பு இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 01. யா. வெ. 508 | 03. யா. வெ. 622 | 05. யா. வெ. 680 | 07. யா. வெ. 1670 |
| 02. யா. வெ. 608 | 04. யா. வெ. 648 | 06. யா. வெ. 792 | |

# ஜனநாயகத்தை மீட்டெடுக்க தீர்க்கமான அரசியல் நடவடிக்கை

-சிறிமாவோ

தீர்க்கமான அரசியல் நடவடிக்கைகளை வெகு விரைவில் மேற்கொள்ளவிருப்பதாகவும், இலங்கையில் ஜனநாயகத்தை மீள்விப்பதற்கு தங்களை அர்ப்பணித்துள்ள சகலருக்கும் தலைமை தாங்கப் போவதாகவும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்திருக்கிறார்.

சீனா, கொங்ஹொங்கிற்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் விடுத்த அறிக்கையில் ''கடந்த 31 வருடங்களாக தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நலன்களை மனதில் கொண்டே செயற்பட்டதாகவும், ஆனால் எதிர்காலத்திலே ஜனநாயகத்துக்கான போராட்டத்துக்கு தலைமை தாங்குவதில் கட்சிக்குள்ளேயே கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவேன்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

எதிர்க் கட்சிகளுடான ஐக்கிய முன்னணியை மீளமைக்க திருமதி பண்டாரநாயக்கா நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாக வெளியான செய்திகளுக்கு மத்தியிலேயே மேற்படி அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய முன்னணி யோசனையை அவரின் கட்சிக்குள்ளே ஒரு பிரிவினர் எதிர்க்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பிரேமாவிற்கு நவீன கார் ஜப். நிறுவனம் அன்பளிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, ஜப்பானிலுள்ள நிறுவனம் ஒன்றிடமிருந்து ''நிசான்'' ரக நவீன காரொன்றை அன்பளிப்பாக பெற்றுக் கொண்டதாக சென்ற 16 ஆம் திகதி 'அத்த' பத்திரிகையில் வெளிவந்த செய்தியை பிரதமர் டி. பி. விஜயதுங்கா பாராளுமன்றத்தில் மறுத்துள்ளார். சுங்கவரி செலுத்தாது இக்காரை ஜனாதிபதி பெற்றுக் கொண்டதாக 'அத்த' பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இக்கார் இலங்கை அரசாங்கத்துக்கு ஜப்பானிய வியாபாரி ஒருவர் அன்பளிப்புச் செய்ததாக அவர் தெரிவித்தார். இவ்வாகனம் கொள்கைத் திட்டமிடல் அமைச்சினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், அரசாங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதால் சுங்கவரி செலுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. இவ்வாகனம் கொள்கைத் திட்டமிடல் அமைச்சில் வைக்கப்பட்டு வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருகைதரும் பிரமுகர்களின் பாவனைக்கு வழங்கப்படும் என பிரதமர் தெரிவித்தார்.

## மாவீரர் கல்லறை வடிவில் வீதி வளைவு

(குருநகர்)

கடந்த ஆண்டு மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்-கோட்டை வடிவமைப்பில் வீதி வளைவு அலங்கரிப்பு இடம் பெற்ற குருநகர் சனசமூக நிலைய முன்றலில் இவ்வருடம் மாவீரர் கல்லறை வடிவமைக்கப்பட்டு வருகிறது.

கடந்தவருடம் வடிவமைக்கப்பட்ட யாழ்-கோட்டை அமைப்பிலான வீதி வளைவுகள் இவ்வருடம் யாழ்-சத்திரத்துச் சந்தியை அலங்கரிப்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை முத்தமிழ் விழாவின் போது யாழ்-கோட்டை நுழைவாயில் வீதியை மேற்படி வீதி வளைவு அலங்கரித்தது தெரிந்ததே. (21)

## மாவீரர் எழுச்சிக் கூட்டங்கள்

மாவீரர் எழுச்சிவார இறுதி நாளான 20-11-91 இன்றைய தினம் யாழ். மாவட்டத்தில் பின்வரும் இடங்களில் எழுச்சி வாரக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

வலிகாமம் பிரிவில் மாலை 7 மணிக்கு தெல்லிப்பளை துர்க்காபுரம் சைவப்பிரகாச பாடசாலையிலும், வடமராட்சிப் பிரிவில் தும்பளை தெற்கு திருவள்ளுவர்சனசமூக நிலைய மைதானத்திலும் எழுச்சிவார கூட்டங்கள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள். கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

அனைத்துத் தமிழீழ மக்களையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் வேண்டுக்கொள்கின்றனர்.

## இரண்டுரூபாகூடுதல்

அத்தியாவசியப் பண்டங்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயித்த பிற்பாடும் இன்று வரைக்கும் வேலணை ப.நோ.கூ.சங்கம் சீனி ஒரு கிலோ 38 ரூபாவாக விற்பனை செய்கின்றது. ஆனால் கட்டுப்பாட்டு விலை 36 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (88)

### புலிகளை

புலிகளின் கடல் நடமாட்டத்தை முடிவுக்கு கொண்டு வர இந்தியா - இலங்கை கடற்படைகள் இணைந்து நடவடிக்கை எடுப்பது குறித்து திட்டம் ஒன்று தயாரிப்பது தொடர்பாக முதுநிலை அதிகாரி ஒருவர் இந்தியா செல்லவுள்ளார். இந்தியா-சிறிலங்கா கடற்படைகளின்மேலதிக கூட்டுமுயற்சி புலிகளை ஒழிப்பதற்கு இரு நாடுகளுக்கும் உதவியாக அமையும் என்றார் அவர்.

இருதரப்பு அதிகாரிகளிடையிலான பேச்சு வடக்கில் யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவருமா என்ற செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் இனப்பிரச்சினைக்கு சமாதானமான ஒரு தீர்வு காண அனைத்து வழிவகைகளும் மேற்கொள்ளப்படும் என்றார் லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணா.

### இராணுவத்தின்

தொடர்கின்றன எந்நேரமும் சண்டையில் ஈடுபட்டுக் கொண்டிருக்க முடியாது ஓய்வு தேவைப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

### இலங்கையில்

அவர் வெளியிட்டார். ஆயுர்வேத மருத்துவத்தில் அனுபவம் பெற்றவர்களும் மருந்துச் சாலைகளில் தொழில் புரிந்தவர்களும் கூட மேற்கத்தைய மருத்துவத்தில் ஈடுபடுவதாகவும் இதனைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

### தலைவர்

யாழ்ப்பாணம், வலிகாமம் சுன்னாகம், சங்கானை, கோப்பாய் ஆகிய இடங்களிலும், வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும் தென்மராட்சியில் சாவகச்சேரி ஆகிய இடங்களிலும் காவல்துறை நிலையங்கள் திறக்கப்படும் என்று அங்கு தெரிவித்த அவர் காவல்துறையின் நகரப் போக்கு வரத்துப் பிரிவு விரைவில் திறக்கப்படும் என்றும் ஆனால்இதன் செயற்பாடு குடாநாட்டின்பல பாகங்களிலும் இடம்பெறும் விபத்து சம்பந்தமான பிரச்சினைகளை கவனிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

காவல் துறையின் தொழிற்பாட்டைத் தொடர்ந்து தமிழீழ நீதிமன்ற முறை ஆரம்பிக்கப்படும் என்றும் சகல சட்ட, ஒழுங்குகளையும் காவல்துறையும், நீதிமன்றும் இணைந்து கையாளும் என்றும் படிப்படியாக இந்த அமைப்புமுறை மற்றைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழீழமக்களின் வாழ்க்கை முறைக்குஏற்ப சட்டஒழுங்கை இந்த அமைப்பு கொண்டிருக்கும் என்று அங்கு கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும்போது அவர் தெரிவித்தார்.

தவிர மாவீரர் வாரத்தில் தமிழீழ காவல்துறை அமைப்பின் விசேட அணிவகுப்பு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

### யாழ்.

இதுவரைமூன்று உணவுக்கப்பல்களே உணவுப் பொருள்கள் ஏற்றிவரும் பணியில் ஈடுபட்டன. அவற்றில் இரண்டு, பழுதடைந்து திருத்த வேலைக்குச் சென்றிருப்பதாகவும் நேற்று முன்தினம் பருத்தித்துறைதுறைமுக பகுதிக்குவந்து சேர்ந்த 'குமாரி' என்ற கப்பலில் உரவகைகளே பெருமளவில் கொண்டு வரப்பட்டன என்று மேலும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது கடல் சூழ்நிலை சாதகமற்று இருக்கும் காரணத்தினாலு ஏற்றிவரப்படும் பொருள்களில் உணவுப் பொருள் குறைவாக இருப்பதனாலும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள கஷ்ட நிலை பற்றி அரசாங்கம் நீண்ட மௌனம் சாதித்து வருகிறது என்றும் இது அரசின் திட்டமிட்ட நடவடிக்கை என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன

தவிர இங்கு மக்களின் அவல நிலையைக் கண்டும் அவர்களிடம் மகஜர்கள் பெற்றுச் செல்லும் அரச அதிகாரிகள் அரசாங்கத்திடம் மக்களின் நிலையை எந்தளவிற்கு உணர்த்தினார்கள் என்று புரிந்து கொள்ள முடியவில்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

### எங்கள்

வித்துக்களாகவும், தமிழீழத்தின் பிறப்பிற்கான போராட்டத்தில் இறப்பை ஏற்றுக் கொண்டு மாவீரர்களாகின வேங்கைகளை மனதிற் கொண்டு, எம்மால் பிரகடனப்படுத்தப்பட்ட மாவீரர் நாள் (தேசிய நாள்) இவ்வருடமும் - இம்மாதம் 27 ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கின்றது. இந்நாளின் முதல் ஆறு நாட்களையும் உள்ளடக்கி எதிர்வரும் 21 ஆம் திகதி மாவீரர்வாரம் ஆரம்பமாகின்

(2ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமருக்கு பிரேமா வாழ்த்துக் கடிதம்

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவிற்கு வாழ்த்துத் தெரிவித்து கடிதமொன்றை எழுதியுள்ளார். இடைத்தேர்தலில் நரசிம்மராவ் வெற்றி பெற்றமையைப் பாராட்டி எழுதப்பட்டிருக்கும் இக்கடிதத்தில் இலங்கை மக்களும், அரசாங்கமும், தானும் நரசிம்மராவின் வெற்றி குறித்து வாழ்த்துத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் இரு நாடுகளுக்குமிடையிலான நெருங்கிய நட்புறவை மேலும் வலுப்படுத்தவும், பிராந்தியவிவகாரங்களில் நெருங்கி ஒத்துழைக்கத் தாம் சித்தமாக இருப்பதாகவும் இக்கடிதத்தில் பிரேமதாசா கூறியுள்ளார்.

## அனுமதி அட்டைகள் இவ்வாரம் அனுப்பப்படும்

அடுத்தமாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க. பொ. த. (சா) பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இவ்வாரம் அனுப்பி வைக்கப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் நடைபெறும் இப்பரீட்சைக்கு 4309 பரீட்சை நிலையங்களில் 5 இலட்சம் மாணவர்கள் தோற்றுவர் இவ்வருடம் முதன் முதலாக கனிஷ்ட தொழில் நுட்பப் பாடத்திற்கு மாணவர்கள் தோற்றவுள்ளனர் இப்பாடம் 18 ஆம் திகதி நடைபெறும்.

## புலிகளுக்கு புகலிடம் இரு இலங்கையர் கைது

ராஜீவ்காந்தி கொலை தொடர்பான சந்தேக நபர்கள் சாந்தன், சாந்தன் ஆகியோருக்கு புகலிடம் அளித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு இரண்டு இலங்கைத் தமிழர்கள் திருச்சியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் 1989தொடக்கம் பாஸ்போட் இல்லாது தங்கியிருந்த இவர்களிடமிருந்து 200 கிலோ வெடிமருந்துகள் குச்சிகள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டனர்

திருமலை மாவட்ட

## மாவீரர்கள் நினைவாக ஒருவார நிகழ்ச்சிகள்

திருக்கோணமலை மாவட்ட மாவீரர்களின் நினைவாக மாவீரர் நாள் இருபத்தோராம் திகதி முதல் இருபத்தேழாம் திகதிவரை கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்நாட்களில் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்களும் திருமலையிலிருந்து இடம்பெயர்ந்த மக்களும் மற்றும் பிரபல கலைஞர்களினதும், யாழ்நகர மக்களினதும் பங்களிப்பினால் பூரணத்துவம் பெறவுள்ளது.

இத்தினங்களில் திருமலை மண்ணின் வீர மைந்தர்கள் நினைவாக மலரஞ்சலி, நினைவுரை கலைநிகழ்ச்சிகள் ஆகியன சிறப்பாக நடைபெறவுள்ளனஎன்பது குறிப்பிடத்தக்கது.

## கலைபண்பாட்டுக்கழகத்தில் தேசிய கொடிஏற்றல்

தமிழீழத்தின் தேசிய நாளான மாவீரர் நாளுக்கு கட்டியம் கூறும் வாரத்தின் முதல் நாளான 21 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 8·00 மணிக்கு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக தலைமைச் செயலகத்தில் தேசியக்கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தமிழீழக் கலைஞர்கள் அனைவரும் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் அழைக்கப்படுகின்றனர். இந்நிகழ்ச்சியில் பண்டிதர் வீ. பரந்தாமன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைப்பார் தொடர்ந்து உரையரங்கு நடைபெறும்.

### உணவை

மாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அவசர தகவல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக தெரிய வருகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண பிரிவு அதிகாரியால் நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது யாழ் மாவட்டத்தில் வாழும் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களின் மிகக் குறைந்தபட்ச அளவையே அனுப்பிவைக்குமாறு அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் இதுவரை தங்களுக்கு அறிவித்திருந்தார் எனவே குறிப்பிடப்பட்ட குறைந்தளவு உணவுப் பொருள்களையாதல் உடனடியாக அனுப்பி வைக்குமாறு அதில் கோரப்பட்டுள்ளதாக தெரிவருகிறது. (ச)

### திட்டமிட்டபடி

பரீட்சை அனுமதி அட்டை, வினாத்தாள் ஆகியவற்றைத் தவிர இப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்கள், காகிதாதிகள், பரீட்சை நோக்குனர், மேற்பார்வையாளர் பதிவேடுகள் கொழும்பில் இருந்து கப்பலில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்துள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி அனுமதி அட்டையுடன் யாழ். கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம் வந்தடைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப் பரீட்சைக்கான நேர அட்டவணை நாளை வெளிவரும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, ஆம் 31 இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.